தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,

மாசி 30, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2023

1992 மார்ச் 13, வெள்ளிக்கிழமை,

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் 9-30 மணியளவில் பேரவை கூடியது,

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை"

மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்க வல்லவரின் ஆற்றலை இகழாதிருப்பது அவரைப் போற்றுவதைவிட சிறந்த ஒரு பண்பாகும்,

1, வினாக்கள்—விடைகள்,

உடுக்குறியிட்ட வினாக்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள், வினா எண் 199. திரு. கே.பி. மணிவாசகம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்,

199—

வக்கீல் குமாஸ்தாக்களுக்கு வீடுகள்,

*4771—திரு. கே.பி. மணிவாசகம் :
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உடுமலைப்பேட்டையில் வக்கீல் குமாஸ்தாக்கள் குடியிருக்க வீடுகள் கட்டித்தரும் கருத்து அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை,

(ஆ) இவ்வினா எழவில்லை,